# 6 மழலையர் பாக்கள் மற்றும் இயைபுப் பாடல்கள்; கவிதைகள் மற்றும் செய்யுள்

## இலக்கு

*பாடல்கள், இயைபுப் பாக்கள் மற்றும் செய்யுள் ஆகியனவற்றைக் கற்றல் / கற்பித்தல் மொழி மேம்பாட்டின் பல திறன்கள் (ஒலிப்பு, சொற்களஞ்சியம், வாக்கியங்கள் அமைக்கும் திறன், இலக்கியக் கல்வி, முதலியன) வளர்ச்சிக்கு அதிமுக்கியமானதாக அமைகின்றன. மழலையர் நிலையில் எளிமையான மழலையர்களின் இயைபுப் பாக்களில் இருந்து, மேல்நிலையில் காப்பியச் செய்யுள்களின் விளக்கம் வரை என எல்லா அகவைநிலை மாணவர்களுக்கும் இவை கற்பிக்கப்படவேண்டும். மழலையர் மற்றும் கீழ்நிலை வகுப்புகளில் மழலையர் பாக்களையும் பா இயைபுகளையும் அறிமுகப்படுத்துவதற்கே கீழே தரப்பட்டுள்ள மதியுரைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன.*

மழலையர் - தரம் 3 | 5 - 15 மணித்துளிகள்

**கருவிகள்:**
பொருத்தமான பாடலடிகள், இயைபுப்பாக்கள், கவிதைகள்

**குறிப்புகள்:**

- முதற் பார்வையில் நமக்குதோற்றமளிப்பதை விட, ஒவ்வொரு பண்பாட்டிலும் நன்கு அறியப்பெற்ற மழலையர் பாக்களும், இயைபுப் பாடல்களும் மொழிமேம்பாட்டுக்கு மிகவும் இன்றியமையாதன. இவற்றின் தாளத்திற்கேற்ப, திருப்பிச் சொல்ல தூண்டும் அமைப்பு சொற்களை மட்டுமன்றி முழுமையான வாக்கியங்களையே விளையாட்டுவழியாக இயல்பாகவே உள்வாங்கத் துணை செய்கிறது. இதனால் ஒலிப்பு, சொற்களஞ்சியம் மற்றும் மொழிஅமைப்பின் வளர்ச்சிக்கு இவை துணைசெய்கின்றன. மேல்நிலை வகுப்புகளில் செய்யுள் கற்பிக்கும் போதும் இது பொருத்தமானதாக அமையும். செய்யுள் நூல்களைக் கற்பதனூடாக தம்முடைய பண்பாட்டின் தனிச்சிறப்பு மிக்க செல்வங்களை அறிந்துகொள்வது மட்டுமன்றி அன்றாட மொழிப்பயன்பாட்டிற்கு விஞ்சிய மொழிப் பயன்பாட்டின் சிறப்புகளையும் நுணுக்கங்களையும் அறிந்து கொள்ள முடிகிறது. இத்தகைய வாய்ப்புகளை மாணவர்களுக்கு வழங்குவதும் அதன் ஆழங்களை அறியவைப்பதும் எளிதான பணி அல்ல, எனினும் இது இன்றியமையாததும் அழகானதும் ஆகும். இதை எவ்வாறு நன்றாகவும் வெற்றியுடனும் அடையலாம் என்பதைத் தென்மேற்கு ஐரோப்பிய பா.மொ.க மனங்கவர் ஒப்புவிப்புகளில் காணலாம்.
- உசாத்துணை: சில்வியா ஹுஃஸ்லர் (2009) (உசாத்துணை நூற்பட்டியலைப் பார்க்கவும்)

---

**சாத்தியமான நடைமுறை ஒன்று:**

- மாணவர்கள் கண்களை மூடி அமர்தல் அல்லது கால் நீட்டிப் படுத்தல் வேண்டும்.
- ஆசிரியர்கள் பாடலை அல்லது இயைபு அடிகளை மெதுவாக, தெளிவாக, உரத்த குரலில் ஓத வேண்டும்.
- பின்னர் மாணவர்கள் வட்டமாக இருந்து, அவர்களுக்கு என்ன புரிந்தது, எந்த சொற்கள் புரியவில்லை, எப்படி மனதில் பதிந்துள்ளது என்பதைக் கலந்து பேச வேண்டும்.
- பாடலுக்கு, அல்லது அடி இயைபுக்கு ஏற்ப, எடுத்துரைப்பிற்கு தக்கவகையில் அபிநயங்களையும், அசைவுகளையும் நெறியாள்தல் செய்யவேண்டும்.
- மாணவர்கள் நெறியாண்ட சைகைகளோடு ஆசிரியர் பாடலை, அல்லது அடிகளை, மீண்டும் பாடிக்காட்டவேண்டும். அவரை பார்த்து மாணவர்களும் அவ்வாறே பாடிச் செய்ய வேண்டும்.
- பிள்ளைகளின் விருப்பிற்கேற்ப அவர்கள் பங்கேற்று பாடல்களைப் பாடுவர். காலப்போக்கில் ஆசிரியர் படிப்படியாக விலகிப் பின் சென்றுவிடுவார்.

---

**மாற்றுவழி:**

- பாடலை / இயைபு அடிகளை குறிப்பிட்ட ஒரு வேளையில் ஓதி அறிமுகப்படுத்தல்: ஒரு செயலை ஊக்குவிக்குமாறு ஒரு பாடல் / இயைபு அடிகள் அமைந்தால் (எ.கா. தூய்மை செய்யும் போது), அச் செயல் செய்யும் போதெல்லாம் ஆசிரியர் அப்பாடலை / இயைபு அடிகளை ஓதுதல் பயனுடையதாகும். இதனால், தங்களை அறியாமலே பிள்ளைகள் அவற்றை உள்வாங்கி இச்செயற்பாட்டு வேளையில் தாமாகவே இணைந்து ஓதுவர்.
- படங்களினூடாக அறிமுகம் செய்தல் (எ. கா. விலங்குகள் பற்றிய பாடல்கள்): பயிற்றுவிப்பாளர் பாடலுக்கு அமைவாகவும் பொருத்தமானதுவாகவும் படங்களை தேர்ந்து எடுக்கவேண்டும்.

- பாடல்களை இயைபு அடிகளை மூத்த மாணவர்களாலும் அறிமுகப்படுத்தப் படலாம்.

**குறிப்புகள்:**

- பிள்ளைகள் தாங்களாகவே ஓதுவதற்கு பாடல் / இயைபு அடிகள் மீண்டும் மீண்டும் ஓதப்பட வேண்டும்
- அசைவுகளும், அபிநயங்களும் சொற்களை மனதில் பதிய வைப்பதற்கு மிகவும் துணை செய்கின்றன. மாணவர்கள் பாடல்களை எவ்வாறு தொடரவேண்டும் என்பதை மறந்துவிட்டால், அவை நினைவூட்டிகளாக அமைகின்றன.

# 7 நாப்பிறழ்வு அடிகள், மொழி விளையாட்டு

**இலக்கு**

*விரைவுச்சொற் பாடல்கள் அல்லது நாப்பிறழ்வுத் தொடர்கள் (ஜெர்மன் மொழியில் Zungenbrecher அல்லது Schnabelwetzer) என்பவற்றுடன் வேறு பிள்ளைப் பாடல்கள் மற்றும் விளையாட்டு மொழிச் செயற்பாடுகள் (பார்க்கவும் #6). அவற்றுடனான "பணி" விளையாட்டாகவும் வேடிக்கையாகவும் அமையும். அதே வேளை அவை கேட்டல் திறனையும் துல்லியமான ஒலிப்பினையும் ஊக்குவிக்கின்றன.*

மழலையர் - தரம் 3 | 5 - 10 மணித்துளிகள்

**கருவிகள்:**
தன் நாட்டு மொழியில் இருந்து ஆசிரியராலும் மாணவர்களாலும் திரட்டிய நாப்பிறழ்வுப் பயிற்சிகள்.

**உசாத்துணைகள்:**
பல்வேறு மொழிகளில் நாப்பிறழ்வுகளை பின்வருவதில் பார்க்கலாம்:
*https://www.heilpaedagogik-info.de/zungenbrecher/287-zungenbrecher-deutsch-sprueche.html*

**நடைமுறை:**

- ஆசிரியர் ஒரு நாப்பிறழ் வாக்கியத்தை மாணவர்களுக்கு எடுத்துரைத்து, அந்த வாக்கியத்தை பகுதி பகுதியாக மாணவர்களுடன் சொல்லப் பழகுதல் வேண்டும்.
- மாணவர்கள் தனியாகவோ, இருவராகவோ அல்லது குழுவாகவோ இந்த நாப்பிறழ், வாக்கியத்தை சொல்லிப் பயிற்சி செய்வர்.

**மாற்றுவழி:**

- ஆசிரியர் நாப்பிறழ் வாக்கியத்தை 2-3 முறை வாய்விட்டுப் படித்த பின், மாணவர்கள் தாம் கேட்டு விளங்கியதை அடிப்படையாக வைத்துத் தாமாகவே அவற்றைத் திரும்பக் கூறவைப்பார். (மேற்காணும் கட்டமைப்பு அணுகுமுறையை விடச் சற்றுக் குறைந்தது).
- மாணவர்கள் தங்களுக்கு தெரிந்த நாப்பிறழ்வு அடிகளை வகுப்புக்குக் கொண்டு வந்து ஏனைய மாணவர்களுக்குக் கற்பிப்பார்கள்.
- இதன் அதிசிறந்த வெளிப்பாடாக அனைத்து மாணவர்களும் தங்களது குடும்பத்தினரிடமும், உறவினர்களிடமும் நாப்பிறழ் அடிகள் மற்றும் இது போன்ற வேறு மொழிவிளையாட்டுகளை கேட்டறிந்து, எழுதி வைக்க வேண்டும். இதன் கோர்வையின் வெளிப்பாடாக ஒரு நூல் அல்லது ஒலிக்கோப்பு (இறுவட்டு, MP3) உருவாக்குதல் வேண்டும். இத் திட்டமானது வழமையான பாட விதான வகுப்புகளிலும் ஏனைய மொழிக் குழுக்களோடும் இயல்பாக இணைத்துக் கொள்ளலாம். அறிமுகம் பகுதியில் இயல் 4 பார்க்கவும்.

**குறிப்புகள்:**

- நாப்பிறழ் அடிகள் கடினமானவை. வாய்மொழி வெளிப்பாடுகளிலே நல்ல தகைமையுடைய மாணவர்கள் பெரியோர்கள் கூட தொடக்கத்தில் அல்லற்படலாம். மற்றும் அனைவருமே ஊன்றிய மனநிலையுடன் செயற்படவேண்டும். இருப்பினும், இவை ஒரு பாடத்தைத் தொடங்கும் முன்னர் சிறிய வேடிக்கையான அறிமுகமாக அமைவதுடன், பாடங்களுக்கு இடையிலும், பாட இறுதியிலும் ஓர் நெகிழ்ச்சிச் செயற்பாடாகவும் அமையும்.

- மாணவர்களின் தகைமைகளை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட செயற்பாட்டு நோக்குகளின் அடிப்படையில் இச்செயற்பாட்டில் விளையாட்டுத் தன்மை இருப்பினும், முழு நிறைவான ஓதல் முயற்சியை மேற்கொள்வது இன்றியமையாததாகும்.

I